# "ஈழமும்சங்ககால முதுமக்கள்தாழிகளும்" -ஓர் ஆய்வு-

பேராசிரியர். சி. க. சிற்றம்பலம்,

## வரலாற்றுப் பின்னணி

இன்றைய தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியன பேசப்படும் பிரதேசங்கள் ஆகும். இவை மிக நீண்ட ஆனால் தனித்துவமான ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தினையுடையன. இதனைப் பழங்கற்காலந்தொட்டுக் காணப்படும் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. பழைய கற்காலத்தில் வேட்டையாடுபவனாக அலைந்து திரிந்தமனிதன் ஒரிடத்தில் நிரந்தரமாக வசித்து உணவு உற்பத்தியில் ஈடுபட்ட காலப்பகுதி புதிய கற்காலமாகும். இம்மாநிலங்களில் இதன்ஆரம்பம் கி.மு.3500 எனக்கொள்ளப் படுகின்றது.[1] இக்கலாசாரத்தில் மையப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது கிடைத்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர் இன்று இங்கு வாழும் திராவிட மொழிகளைப் பேசுவோரின் மூதாதையினரே இவர்கள் என இனங்கண்டு கொண்டுள்ளனர்.[2]

சங்க இலக்கியங்கள் பேசும் பழந்தமிழரின் அடக்க முறைகளிலொன்றாகிய தாழி அடக்கமும் நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தலும், புதிய கற்காலத்திலிருந்தே திராவிடமொழிகளைப் பேசும் மாநிலங்களில் வழக்கிலிருந்ததைப் பிக்லிகால்[3], பிரமகிரி[4],நரசிப்பூர்[5], கல்லூர்[6] ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. அத்துடன் இவ் வீமக்குழிகளில் ஞாபச் சின்னமாக நாட்டப்பட்ட கற்கள், இவற்றுடன் காணப்படும் கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியன இக்காலத்தைத் தொடர்ந்து வந்த பெருங் கற்காலம் புதிய கற்காலத்தின் வளர்ச்சியே என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. பெருங்கற்காலமென்பது திராவிடர்களின் பிரதேசத்தில் ஏற்பட்ட ஒரு புதிய கலாசார வளர்ச்சியையே குறித்து நின்றது. அதாவது புதிய கற்காலத்தில் வசிப்பிடங்களில் இறந்தோரை அடக்கஞ் செய்த மக்கள் பெருங்கற்காலத்தில் வசிப்பிடங்களுக்கு அப்பால், பயிர்ச்செய்கைக்குப் பயன்படாத இடங்களில் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததால் இது இவ்வாறு பெயர் பெறலாயிற்று. புதிய கற்காலத்தில் வழக்கிலிருந்த தாழி அடக்கம், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தல் ஆகிய வழக்கங்களோடு பெரிய கற்களால் அமைக்கப்பட்ட இச் சின்னங்களான கல்வட்டங்கள், கற்பதுக்கைகள் போன்றனவற்றை அமைக்கும் முறைகளையும் வெளி உலகத்தொடர்பினால் இவர்கள் இக்காலத்தில் கற்றுக் கொண்டனர். இக்கருத்தினை உறுதி செய்வதாகப் புதிய கற்கால ஈமச் சின்னங்களில் ஞாபகச்சின்னங்களாக அமைக்கப்பட்ட கற்கள் விளங்குகின்றன.

வெறும் ஈழச் சின்னங்கள் மட்டுமன்றி, நீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துதல், வயல்கள் ஆகியனவும் புதிய கற்காலத்திலிருந்து ஏற்பட்ட வளர்ச்சியையே எடுத்துக்காட்டுகின்றன. இதனால் பெருங்கற்காலத்தின் பிரதான அம்சங்களாகிய மக்கள் வாழ் வசிப்பிடங்கள், இடுகாடுகள், குளங்கள், வயல்கள் என்பன புதிய கற்கால மக்கள் ஏற்படுத்திய கலாசார வளர்ச்சியையே எடுத்தியம்புகின்றன. அத்துடன் பெருங்கற்காலத்தின் பிரதான முத்திரையாக விளங்கிய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்களும் புதிய கற்காலத்திலேயே தோன்றிவிட்டன. அத்துடன் இக்காலத்தில் முக்கிய உலோகமாக விளங்கிய இரும்பின் உபயோகத்தினையும் புதிய கற்கால மக்கள் கற்றுக் கொண்டதைப் புதிய கற்காலக் கலாசார அம்சங்கள் பல பெருங்கற்காலத்திலும் நீடித்திருந்ததற்கான சான்றுகள் எடுத்தியம்புகின்றன.[7] இவ்வாறு இரும்பின் உபயோகம் பெருங்கற்காலக் கலாசார வளர்ச்சியைத் துரிதப்படுத்தியதோடு அம் மக்களை நாகரிக வளர்ச்சிக்கும் இட்டுச் சென்றது. இந்நாகரிக வளர்ச்சிதான் வரலாற்றின் ஆரம்பகாலம் எனப்படுகின்றது. இவ்வாறு புதிய கற்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக் காலம் ஆகியன ஒரு

மக்கள் கூட்டத்தினரின் கலாசார வளர்ச்சியே என்பதனை 1946 இல் பிரமகிரியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது இனங்காணப்பட்ட புதிய கற்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் ஆகியனவற்றின் கலாசாரப்படைகளுக்கு இடையே இழைவிட்டோடும் ஒற்றுமையும் எடுத்துக் காட்டியுள்ளது.[8]

தமிழகத்தினைப் பொறுத்தமட்டில் ஏனைய திராவிடமொழிகள் பேசப்படும் மாநிலங்கள் போன்று இப்பகுதியில் விரிவான அகழ்வுகள் மேற்கொள்ளப் படாவிட்டாலுங்கூடக் கிடைக்கும் சான்றுகள் தாழி அடக்கத்தின் தொன்மையை எடுத்துக்காட்டியுள்ளதோடு தென் தமிழகத்தில் குறிப்பாகத் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் கிடைத்த சான்றுகள் பழந்தமிழரின் அடக்க முறைகளில் இது காலத்தால் முற்பட்ட முறை என இனங்காட்டியுள்ளன. இவ்வடக்க முறை பற்றி ஆராய்ந்த சௌந்தரராஜன் குறிப்பாகத் தென்பெண்ணை ஆற்றுக்குத் தெற்கே காணப்படும் தாழிகள் காலத்தால் மிகப் பழைமை வாய்ந்தவை என எடுத்துக் காட்டியுள்ளார்.[9]

## தாழி அடக்கத்தின் பழைமையைக் கூறும் சங்க நூல்கள்

இத்தகைய பழைமையான அடக்க முறையான தாழி அடக்கம் பற்றிச் சங்க இலக்கியங்களில் காலத்தால் முந்திய புறநானூறு[10] '

.................நெடுமாவளவன்
தேவருலக மெய்தின னாதலின்
அன்னோற் கலிக்குங் கண்ணகன்றாழி'

(பாடல் 228)

கலஞ் செய் கோவே கலஞ் செய் கோவே
அச்சுடைச் சாகாட்டாரம் பொருந்திய
சிறு வெண் பல்லி போலத் தன்னோடு
சுரம் பல வந்த வெமக்கு மருளி
லியன் மல ரகன் பொழி வீமத்தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ் செய் கோவே

(பாடல் 256)

நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங் காடெய்திய ஞான்றே

(பாடல் 364)

நற்றிணை [11]

மாயிருந் தாழி கவிப்பத்
தாவின்று கழிக எற் கொள்ளாக் கூற்றே

(பாடல் 271)

ஆகியன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளமை. இதன் பழைமைக்குச் சிறந்த உரைகல்லாகின்றது.

## தமிழகத்தின் தாழியடக்க மையங்கள்

தமிழகத்திலுள்ள தாழி அடக்கத்தின் தனித்துவத்திற்குச் சிறந்த உரைகல்லாக அமைவது தாம்ரவர்ணிப் படுக்கையில் காணப்படும் ஆதிச்சநல்லூராகும். கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இத்தாழிக்காடு பற்றி விரிவான சான்றுகளைத் தராவிட்டாலுங் கூட இது பற்றி ஓரளவுக்கு அறிந்து கொள்ள உதவியுள்ளன.[12] இதன் பரப்பு 116 ஏக்கராகும். இந்தியாவிலுள்ள மிகப் பெரிய தாழிக்காடு இ∴தாகும். சாதாரணமாகத் தாழிகள் ஒரு மீற்றர் உயரமானவை. மங்கல் சிவப்பு நிறமுடையவை. பருமனான கரடு முரடான மண் சேர்க்கையாலானவை. தாழிகளின் விளிம்புகள் உருண்டு திரண்டுள்ளன. தாழிகளின் மேல் விளிம்புப்பகுதியில் கைவிரல் அலங்கார வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. இத்தாழிகளை மூடுவதற்குப் பெரிய சட்டிகள் மட்டுமன்றிச் சட்டிகளின் உடைந்த பாகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் சிறிய கற்களும் தாழிகளின் மூடிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாழிகளில் நிவேதனப் பொருட்களாகப் பல்வேறு நிறத்தினாலான மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. கறுப்பு, சிவப்பு, ஆகிய நிறங்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவை பல்வேறு ரகத்தினைச் சேர்ந்தவையாகவுமுள்ளன. கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள், குண்டான்கள், கூசாக்கள், தாங்கிகள் போன்றன இவற்றுட் குறிப்பிடத்தக்கன. நிவேதனப் பொருட்களின் வரிசையில் வெண்கலம், இரும்பு ஆகிய ஊலோகங்களிலமைந்த கருவிகள் மட்டுமன்றி வெண்கலத்தினாலான சிற்பங்களும் அடங்கும். இவ்வாறே கொற்கை காயல்பட்டினம் ஆகிய இடங்களில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் கால்வெல்ட் மேற் கொண்ட ஆய்வுகளின் மூலமாகத் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.[13] அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டுத் தொல்பொருட்டுறையினர் இங்கு அகழ்வை மேற்கொண்டிருந்தனர். இப் பகுதியில் இவ்வடக்க முறையின் தோற்றம் கி.மு. 9ஆம் நூற்றாண்டாக (கி.மு.785/805) இனங் காணப்பட்டுள்ளது.[14] மதுரை மாவட்டத்திலுள்ள பெருமாள்மலை [15] பாண்டிச்சேரி [16] ஆகிய

பிரதேசங்களிலும் வடக்கே அமிர்தமங்கலம்[17] போன்ற இடங்களிலும் இத்தகைய சான்றுகள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்கள் பேசும் மிகப்பழைய அடக்க முறையாகிய தாழி அடக்க முறையும் நீளக் கிடத்தி அடக்கஞ் செய்யும் வழக்கமும் பாண்டி நாட்டின் தென்பகுதியில் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் விரவிக் காணப்பட்டுள்ளன. இவ்வாறே வடமேற்கு ஈழத்திலும் தாழி அடக்கமும், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்யும் மரபும் சிறந்து விளங்கியிருக்கலாம் என்பதைப் பொம்பரிப்பு போன்ற தாழிக்காடுகள் மட்டுமன்றி, கரம்பன்குளம், தெக்கம், ஆனைக்கோட்டை போன்ற இடங்களிற் கிடைத்த தாழி அடக்கத்திற்குரிய சான்றுகளும் மாந்தை[18], ஆனைக்கோட்டை[19], சத்திராந்தை[20] ஆகிய இடங்களில், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்யப்பட்டதற்கான சான்றுகளும் உறுதி செய்கின்றன.

## ஈழமும் தாழியடக்கமும்

ஈழத்தைப் பொறுத்தமட்டில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் ஈழத்தின் நாகரிகத்தின் உதயம் பற்றிப் பல புதிய தரவுகளைத் தந்துள்ளன. 1969 இல் அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஈழத்தில் புதிய கற்கால மனிதன் உணவு உற்பத்தியிலீடுபட்டதற்கான தடயங்களுக்குப் பதிலாக இடைக்கற்கால மனிதனே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததை உறுதி செய்துள்ளன.[21] இக்காலததை அடுத்துப் பெருங்கற்காலக் கலாசாரம் தென்னிந்தி யாவிலிருந்து ஈழத்திற் புகுந்ததை இங்கு கிடைத்த பெருங்கற்காலக் கலாசாரத்தின் எச்சங்களுக்கும் தென்னிந்தியப் பெருங் கற்கால கலாசாரத்தின் எச்சங்களுக்குமிடையே இழை விட்டோடும் ஒற்றுமை உறுதி செய்துள்ளது.[22] இதனால் தென்னிந்தியப் பெருங்கற்காலக் கலாசாரம் மேவிப்பாய்ந்த இடமாகவும்,[23] அதன் தென் எல்லையாகவும் ஈழம் கொள்ளப்படுகின்றது.[24] 1946இல் தென்னிந்தியாவிலுள்ள பிரமகிரியில் சேர் மோற்றிமர் வீலரினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வானது பெருங்கற்காலக் கலாசாரமே வரலாற்றுக்காலக் கலாசாரத்திற்கு வழிவகுத்தது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்தியதோ அவ்வாறே அநுராதபுர அகழ்வும் ஈழத்து நாகரிக வளர்ச்சிக்குப் பெருங்கற்காலக் கலாசாரமே வித்திட்டது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்கூறிய பின்னணியிற்றான் ஈழத்திற் காணப்படும் பெருங்கற் காலத் தாழி அடக்கங்கள் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது. ஈழத்தி[ல்] தாழி அடக்கத்திற்கான ஆதாரங்க[ள்] ஆனைக்கோட்டை, வெட்டுக்காடு,[25] தெக்கம், கரம்பன்குளம், பொம்பரிப்பு, கதிர்காமம் [ஆ]கிய இடங்களிற் காணப்பட்டாலும் பொம்பரிப்பிற்றான் கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டுக் காலமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலமாக முப்பதிற்கு மேற்பட்ட தாழிகள் இனங்காணப்பட்டுள்ளதால் பொம்பரிப்பை மையமாக வைத்துக் கொண்டே ஈழத்துத் தாழி அடக்கம் பற்றி ஆராய வேண்டியுள்ளது. (படம்-1)

பொம்பரிப்புப்பகுதி புத்தளம்-மன்னார் வீதியில் 21ஆவது மைற்கல்லில் உள்ளது. மன்னாருக்குத் தெற்கே 89 கிலோ மீற்றர் தூரத்திலும் புத்தளத்திலிருந்து வடக்கே 30 கிலோ மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. கடற்கரையிலிருந்து $6^1/_2$ கிலோமீற்றர் தூரத்திலமைந்துள்ள இத் தாழிக்காடு கால ஓயா நதி தீரத்தில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வடமேற்குப் பகுதியிற்றான் ஆதி ஈழத்தில் சிறந்து விளங்கிய துறைமுகங்களும் நகரங்களும் காணப்பட்டன. இவற்றுள் அருவி ஆறாகிய மல்வத்து ஓயாக் கரையில் அமைந்துள்ள மாந்தைத் துறைமுகம், மொதரகம் ஆற்றங்கரையில் காணப்பட்ட மகன என்ற நகரம், கலாஓயா முகத்துவாரத்திற் காணப்பட்ட உருவெல ஆகிய இடங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அதுமட்டுமன்றி, தமிழகத்திலுள்ள புகழ்பூத்த தாழிக்காடாகிய ஆதிச்ச நல்லூருக்கு எதிரே இது அமைந்துள்ளதும் இவ்விடத்திற்குரிய இன்னோர் முக்கிய அம்சமாகும்.

1924இல் முதல் முதலாகக் கோகாட் இவ்விடத்தில் அகழ்வை மேற்கொண்டிருந்தார்.[26] இவ்வகழ்வின்போது ஒரு தாழி இவரால் வெளிக் கொணரப்பட்டது. இதன் பின்னர் ஈழத்துத் தொல்லியற்றிணைக்களம் 1956, 1957 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட அகழ்வின் மூலமாகப் பல தாழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.[27] 1965 இல் கொட்றிங்ரன் இப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் பயனாக ஒரு தாழி வெளிக் கொணரப்பட்டது.[28] எனினும் 1970 இல் பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பேக்லேயின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தான் இவ்விடம் பற்றிய பல விரிவான தகவல்களைத் தந்தன. இவரின் ஆய்வுகள் இத்தாழிக் காட்டிற்கும் ஈழத்திலுள்ள பிற பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் கிடைத்த சான்றுகளுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக்

காட்டியுள்ளன.[29] அதுமட்டுமன்றி இச்சின்னங்கள் பொம்பரிப்புக் கலாசாரமக்கள் மாந்தைக் கரையோரமாக வடக்கே கந்தரோடையுடனும், அநுராதபுரத்தினுடனும் தொடர்பு கொண்டிருந்ததற்கான சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ள பேக்லே ஈழத்தின் வரண்ட வலயப் புவியியற் பண்புகள் தமிழகப் புவியியற் பண்புகளுடன் ஒத்துக் காணப்பட்டதாலும், தமிழக மக்கள் தமது பிராந்தியத்திற் தமக்குப் பரிட்சயமான புவியியற் பண்புகளை ஒத்த இன்னோரிடத்திற்குப் பரவுவது இலகுவாயிற்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தாழிகளும் நிவேதனப் பொருட்களும்

1970 இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் இத்தாழிக்காடு 3 - 4 ஏக்கர் பரபபில் அமைந்துள்ளதை எடுத்துக் காட்டினாலுங்கூட நமது மேலாய்வுகள் இதனை விடக்கூடிய பரப்பளவில் இது காணப்பட்டிருக்கலாம் என எடுத்துக்காட்டியுள்ளன. 1970 ஆம் ஆண்டின் ஆய்வின்போது 1.5 அல்லது 2 சதுர மீற்றர் இடைவெளியில் 8000 தாழிகள்வரை புதைக்கப்பட்டு இவற்றுள் 10-12 ஆயிரம் மக்கள் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கலாமெனவும் கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் தாழிகள் 1- 1/4 மீற்றர் உயரமும் 40-90 செ.மீற்றர் விட்டமும் உடையன. இவை உருண்டு திரண்ட விளிம்புகளுடனும் இவற்றின் மேற் பகுதி அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டும் காணப்படுகின்றன. இத்தாழிகள் கரடுமுரடான சேர்க்கையையுடையன. செம்மண், சாம்பல் நிறத்தினாலான இத்தாழிகளின் பாகங்கள் சரியான முறையிற் சுடப்படவில்லை என்பதை அவை எடுத்துக் காட்டியுள்ளன. தாழிகளின் உடைந்த பகுதிகளை ஆராய்ந்தபோது இவற்றின் மண் சேர்க்கையில் நெல் உமிகளும் இனங்காணப் பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. முழுமையான முறையில் இத்தாழிகள் வெளியே கொணரப்படாவிட்டாலும் இவற்றின் பாகங்கள் இவற்றின் அடித் தளங்கள் கூர்மையான அல்லது தட்டையான அல்லது வளைந்த முனையை உடையன என்பதை எடுத்துக் காட்டியுள்ளன.

1970 இல் இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இவ்வடக்க முறைபற்றி மேலும் பல தகவல்களைத் தந்துள்ளது. பொதுவாக நிலத்திலிருந்து 1/2 மீற்றர் ஆழத்திற் புதைக்கப்பட்ட இத்தாழிகளில் இறந்தோரின் முழு எலும்புகளும் காணப்படவில்லை. முக்கிய எலும்புகளான தலை, கை, கால் எலும்புகளே இவற்றுள் உள. மண்டையோடுகள் பெரும்பாலும் வட்டில்களில் வைக்கப்பட்டுள்ளன. மனித எலும்புக்கூடுகளின் பகுதிகளோடு நிவேதனப் பொருட்களாக இவர்கள் பயன்படுத்திய பொருட்களும் இத்தாழிகளில் இடப்பட்டிருந்தன. மட்பாண்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் சில தாழிகளில் ஆகக் கூடியதாக 13 மட்பாண்டங்களும் ஆகக் குறைந்ததாக இரு மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. தாழிகளுக்குள்ளேயே மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்களை இடும் வழக்கம் பொதுவாகக் காணப்பட்டாலுங்கூடத் தாழிகளுக்கு வெளியே மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்களை அளித்ததற்கான தடயங்களும் உள. தாழிகளில் நிவேதனப் பொருட்களாக வெண்கல மைக்குச்சிகள், வெண்கலக்காப்புகள், வெண்கல மணிகள், கல்லினாலான பல்வேறு மணிகள், பறவை, மிருகங்கள் ஆகியனவற்றின் எலும்புகள் ஆகியனவும் காணப்படுகின்றன. இந்நிவேதனப் பொருட்கள் தாழிகளின் உள்ளே காணப்படும் போது அவை அடிப்பாகத்திற்றான் இடப்படுவது வழக்காகும்.

பொதுவாக ஒரு குழியில் ஒரு தாழியை மட்டும் அடக்கஞ் செய்யும் மரபு காணப்பட்டாலுங்-கூடப் பல்வேறு தாழிகளை ஒரே குழியில் அடக்கஞ் செய்ததற்கான சான்றுகளும் உள. அத்துடன் ஒரே தாழியில் ஒருவரின் எலும்பு மட்டுமன்றி ஒன்றுக்கு மேற்பட்டோரின் எலும்புகளும் காணப்படுகின்றன. இவ்வெலும்புகளில் முதியோர், இளையோர் ஆகியோரின் எலும்புகள் காணப்படுவதானது ஒரே குடும்பத்தினர் பல்வேறு காலங்களில் இறந்தாலுங்கூட அவ்வெலும்புகளை ஒன்றாகச் சேர்த்து அடக்கஞ் செய்யப்பட்டதை இவை எடுத்துக் காட்டலாம். அல்லது சமகாலத்தில் முதியோர் இளையோர் இறந்ததன் விளைவாகவும் இவ்வெலும்புகள் இத்தாழிகளில் இடப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் ஒருவர் இறந்தவுடன் கிராமத்தின் ஒதுக்குப் புறமான இடத்தில் அவரின் உடலை வைத்துப் பின்னர் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அவற்றைச் சேகரித்து இத்தாழிகளில் இட்டனர் எனத் தெரிகின்றது.

இத்தாழிகள் தோற்ற அமைப்பில் ஆதிச்சநல்லூர் [30], கொற்கை[31], பெருமாள்மலை [32], போர்க்களம் [33], அமிர்தமங்கலம்[34], ஆகிய இடங்களிலுள்ள தாழிகளோடு ஒத்துக் காணப்படுவது அவதானிக்கத்தக்கது. உதாரணமாக ஆதிச்ச நல்லூரில் பல்வேறு தோற்றங்களைக் கொண்ட தாழிகள் இனங் காணப்பட்டுள்ளன. இவை யாவும் திரண்ட வாய்ப்பகுதியையுடையனவாகக் காணப்படுவது மட்டுமன்றி இவற்றின் மேற்பகுதியில்

பொம்பரிப்பிற் காணப்படுவது போன்று கைவிரல் அலங்கார வேலைப்பாடுகளும் உள. (படம்-2). தோற்ற அமைப்பில் ஆதிச்ச நல்லூரிற் காணப்படும் தாழிகள் பல்வேறு பரிமாணங்களில் உள. இவை 0.66மீ-0.91மீற்றர் உயரமும் 1.6 மீற்றர் -2.24 மீற்றர் சுற்றளவுமுடையவை. தாழிகள் தட்டையான அல்லது வளைந்த அடிப்பாகத்தையுடைய பெரிய சட்டிகளால் மூடப்பட்டுள்ளன. கொற்கை போன்ற இடங்களில் இத்தகைய மூடிகளுக்குப்பதிலாகத் தேங்காய் அளவு பரிமாணமுள்ள கற்காளாலும் தாழிகளின் வாய்ப் பகுதி மூடிக் காணப்பட்டன. சில சமயம் தாழி அடக்கங்களுக்கு மேலே கற்குவியல்களும் காணப்படுவதுண்டு. மேற் கூறிய அம்சங்கள் யாவும் பொம்பரிப்புத்தாழி அடக்கத்திற் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

## மட்பாண்டங்கள்

அடுத்து முக்கியம் பெறுவது இத்தாழிகளினுள் காணப்படும் மட்பாண்டங்களாகும். இவற்றுள் சிறப்பானவை கறுப்பு-சிவப்பு நிறத்திலமைந்த கிண்ணங்களும், வட்டில்களுமாகும். (படம்-3). இவற்றோடு பல் வேறு தோற்றத்தினையுடைய சிவப்பு, கறுப்பு நிறங்களிலமைந்த மட்பாண்டங்களும் ஈழத் தாழிகளிலே கிடைத்துள்ளன. இத்தகைய மட்பாண்டங்களின் செய்கை முறையை அவதானிக்கும் போது குறிப்பாக இவற்றுக்குப் பயன்படுத்திய மண்சேர்க்கை கரடு முரடான மண் சேர்க்கையுடன் காணப்படுவதும், இவற்றை ஆக்குவதில் ஒரு வளர்ச்சியடையாத நிலையையே இவை எடுத்துக் காட்டுவதால், இத்தகைய மட்பாண்டங்களை ஆக்குவோரின் ஆரம்ப முயற்சியாகவே இவை அமைந்துள்ளமை தெளிவாகின்றது. இத்தகைய போக்கே தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப்பழைய பெருங்கற்காலக் கலாசார மையப் பிரதேசங்களிற் கிடைத்துள்ள மட்பாண்டங்களில் காணப்படுவதும் ஈண்டு அவதானிக்கத் தக்கது. இதனால் ஈழத்து மட்பாண்டங்களும் தமிழகத்தை ஒத்த காலத்தில் ஈழத்துக்கு வந்து குடியேறிய மக்களின் செயற்பாடுகளையே உணர்த்துகின்றன என யூகிக்கலாம். அத்துடன் பொம்பரிப்பிற் கிடைத்த மட்பாண்டங்கள் தோற்ற அடிப்படையில் ஒரு புறத்தில் ஈழத்திற் காணப்பட்டுள்ள பிற பெருங் கற்கால மையப் பிரதேசங்களான திவுல்வேவ, ஆனைக்கோட்டை, காரைநகர், பின்வேவ, குருகல்கின்ன, அஸ்மடால, முக்கறுக்கொட, மக்கேவிற்ற, கொல்லன்கனத்த, திஸ்ஸமகாராம, கந்தரோடை, அநுராதபுரம் ஆகிய இடங்களிற் காணப்பட்டுள்ள மட்பாண்டங்களோடும் மறு புறத்தில் தமிழகப் பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் கிடைத்த மட்பாண்டங்களோடும் ஒத்துக் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பொம்பரிப்பிற் கிடைத்த மட் பாண்டங்களைத் தோற்ற அடிப்படையில் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என மூன்று பிரிவாக வகுக்கலாம். முதலிற் கிண்ணங்களை நோக்குவோம். தோற்ற அடிப்படையில் இவற்றை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். முதலாவது ரகத்தினைச் சேர்ந்தவை விட்டத்தில் 10.செ.மீற்றருக்குக் குறைந்தவையாகும். அத்துடன் இக் கிண்ணங்கள் சிலவற்றின் பக்க விளிம்புகள் நேராகவும், உள்குவிந்தும், வெளிக்குவிந்தும் காணப்படுவதோடு அடிப்பாகங்கள் தட்டையாகவும் வளைந்த நிலையிலும் காணப்படுகின்றன. முதலாவது ரகத்தினைச் சேர்ந்த கிண்ணங்கள் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் [35], அரிக்கமேடு[36], சானூர்[37], அமிர்தமங்கலம்[38], பழைய சேர நாடாகிய இன்றைய கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம்[39], மச்நாட்[40] ஆகிய இடங்களிற் கிடைத்த கிண்ணங்களை ஒத்துக் காணப்படுகின்றன. இரண்டாவது ரகத்தினைச் சேர்ந்தவை அளவிற் சிறியனவாகக் காணப்படுவதால் ஆதிச்ச நல்லூரில் இவற்றை அகழ்ந்தெடுத்த ஆராய்ச்சியாளரான அலெக் சாண்டர் ரீ இவற்றை மைக் கிண்ணங்கள் என அழைத்துள்ளார்.[41] இதே போன்ற கிண்ணங்கள் அமிர்த மங்கலத்தில் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.[42]

கிண்ணங்களைப் போலவே வட்டில்களும் நேரான, உள்குவிந்த, வெளிக்குவிந்த பக்கங்களுடன் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்பாகங்களும் சற்று வளைந்த, சற்று அதிகம் வளைந்த, தட்டையான தோற்றத்துடன் காணப்படுகின்றன. பொதுவாக வட்டில்கள் சற்று வளைந்த அடிப்பாகத்தையுடையனவாகவே காணப்படுகின்றன. இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர்[43], அரிக்கமேடு[44], சானூர்[45], திருக்காம்புலியூர்[46] ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. சற்று அதிகம் வளைந்த வட்டில்கள் அரிக்கமேடு[47], சானூர்[48] போன்ற இடங்களிற் கிடைத்துள்ளன. தட்டையான அடித்தளத்தினையுடைய வட்டில்கள் அரிக்கமேடு[49], ஆதிச்சநல்லூர்[50] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன.

மட்பாண்டங்களும் பல்வேறு தோற்றத்துடன் காணப்படுகின்றன. இவற்றை எல்லாமாகப் பத்து வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகையைச் சேர்ந்த மட்பாண்டங்கள் குட்டையாகக் குறுகிய கழுத்தையும், வெளிக்குவிந்த விளிம்பையும், சற்று வளைந்த அடிப்பாகத்தையும் உடையன.

தமிழகத்திலுள்ள அரிக்கமேடு[51], திருக்காம்புலியூர்[52] ஆகிய இடங்களிற் கிடைத்த மட்பாண்டங்கள் இத்தகைய ரகத்தினைச் சேர்ந்தவையே. வளைந்த குறுகிய கழுத்தையும் விசாலமான பக்கத்தினையும் உடையவை இரண்டாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இதே போன்ற மட்பாண்டங்கள் தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெருங்கற்காலக்கலாசார மையப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.[53] மூன்றாவது ரகத்தினைச் சேர்ந்த மட்பாண்டங்கள் குறுகிய விளிம்பையும் விசாலமான அடிப்பாகத்தையுமுடையன. இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்ச நல்லூரில் உள.[54] விசாலமான அடிப்பாகத்தையும் ஒடுக்கமான கழுத்தையும் வெளிக்குவிந்த விளிம்பையுமுடையன நான்காவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இவற்றை ஒத்த மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர்[55], அரிக்கமேடு[56] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. ஐந்தாவது ரகத்தினைச் சேர்ந்த நீண்ட கழுத்தையும் விசாலமான அடிப்பாகத்தினையுமுடைய மட்பாண்டங்கள் அமிர்தமங்கலம்,[57] திருக்காம்புலியூர்[58] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ள மட்பாண் டங்களை ஒத்துக் காணப்படுகின்றன. வளைந்து விரிந்த கழுத்தையும் பானையின் மேற் பகுதியில் அலங்கார வேலைப்பாடுகளையுமுடைய மட் பாண்டங்கள் ஆறாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூரிலும் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன.[59] ஏழாவது ரகத்தினைச் சேர்ந்தவை உலைமூடிகள் ஆகும். இத்தகைய உலைமூடிகள் அரிக்கமேடு[60], திருக்காம்புலியூர்[61], அமிர்தமங்கலம்[62] ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. மூடிகள் எட்டாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இத்தகைய மூடிகள் ஆதிச்ச நல்லூரிலும் கிடைத்துள்ளன.[63] மட்பாண்டங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நீண்ட தாங்கிகள் ஒன்பதாவது ரகத்தினைச் சார்ந்தவையாகும். இவற்றை ஒத்த தாங்கிகள் ஆதிச்ச நல்லூர்[64], அழைகரை[65] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. இறுதியானவை அரைவட்டம் போன்ற பக்கங்களையும் ஆங்கில எக்ஸ் வடிவமுள்ள மட்பாண்டங்களை வைப்பதற்கப் பயன்படுத்தப்பட்ட தாங்கிகளாகும். ஆதிச்சநல்லூர்[66], போர்க்களம்[67], சானூர்[68] ஆகிய இடங்களில் இத்தகைய தாங்கிகள் கிடைத்துள்ளன.(படம்-4)

இம்மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகள் தமிழக மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகளை ஒத்துக் காணப்படுகின்றன. இக்குறியீடுகளில் நேரான கோடுகள், தர அடையாளங்கள், ஆங்கில எழுத்தாகிய M வடிவத்தையும், Z வடிவத்தையும் ஒத்த அடையாளங்கள், பிராமி 'ம' வடிவ அடையாளங்கள், பெட்டியிலமைந்த மரத்தையுடைய அடையாளம், இருதலைச்சூலம், நான்கு வளைந்த கோடுகள் மூலம் பெண் தெய்வத்தினை உருவகப்படுத்தும் குறியீடுகள், குதிரையின் கடிவாளத்தைச் சித்திரிக்கும் குறியீடு ஆகியன குறிப்பிடத்தக்கன. குதிரையின் கடிவாளம் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிற் கிடைத்தது போன்று ஈழத்திற் கிடைக்காவிட்டாலுங்கூட ஈழத்தின் பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் குதிரையின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதானது குதிரையின் உபயோத்தினை ஈழத்துப் பெருங்கற்கால மக்களும் அறிந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்துப் பாளி நூல்கள் கி.மு.2ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து ஈழத்தின் மீது படையெடுப்பை மேற் கொண்டோராகச் சேனன், குத்திகன் என்ற இரு குதிரை வணிகரின் புத்திரர்பற்றிக் குறிப்பிடுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.[69]

## மக்களின் வாழ்வும் வளமும்

ஈழத்துப் பெருங்கற்கால மக்களின் எலும்புக்கூடுகள் பொம்பரிப்பு[70], மாந்தை[71], ஆனைக்கோட்டை[72], சத்திராந்தை[73] ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன. இவ்வாறே தமிழகம் உட்பட்ட தென்னிந்தியாவிலும் இக் கலாசாரத்திற்குரிய மக்களின் எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த கென்னடி தற்காலத்தில் தென்னிந்தியாவில் வாழும் மக்கள் பெருங்கற்கால மக்களின் வழித் தோன்றல்களே என்பதை உறுதி செய்துள்ளார்[74] ஈழத்திலுள்ள பொம்பரிப்புத் தாழிக் காட்டிற் கிடைத்த எலும்புகளை ஆராய்ந்த இவர் இவற்றுக்கும், தமிழகத்துப் பெருங்கற்கால மக்களின் மையப் பிரதேசங்களிற் கிடைத்துள்ள எலும்புகளுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை இனங்கண்டுள்ளார்.[75] இவ்வாறே மாந்தையிற் கிடைத்த எலும்புக்கூடும் தென்னிந்திய வர்க்கத்தினைச் சார்ந்தது என இனங்காணப்பட்டுள்ளது.[76] ஆனைக் கோட்டை எலும்புக்கூடு மானிடவியலாளரால் ஆராயப்படாவிட்டாலுங்கூட இவ்வெலும்புக் கூட்டுடன் கிடைத்துள்ள முத்திரையின் வாசகம் பழந்தமிழ் வடிவமாகிய கோவேத/கோவேதன் /கோவேந்த/ கோவேதம் என இனங்காணப் பட்டமையானது[77] இவ்வெலும்புக்கூடும் பழந்தமிழருடையதே என்பது மேலும் உறுதியாகின்றது.[78] பாளிநூல்களில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள காலப் பகுதியில் தமிழகத்திலிருந்து ஈழத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட படை எடுப்புக்கள் பற்றிக் காணப்படும் குறிப்புகள், ஈழத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் தமிழகம் காணப்படுவது ஆகியன தமிழ்

மக்கள் ஈழத்தில் பரவுவதற்கான வாய்ப்பை அளித்தன. இதனை மனதிற் கொண்டுபோலும் பரணவித்தான ஈழத்துப் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய மக்கள் பழந்தமிழர்(திராவிடர்) எனக் கூறியுள்ளார்.[79]

தமிழகத்தைப் போல ஈழத்திலும் குளங்களில் நீரினைத் தேக்கி நெல் உற்பத்தியில் பெருங்கற்கால மக்கள் ஈடுபட்டிருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது பெருங்கற்காலக் கலாசாரப் படையில் செயற்கையாக உருவாக்கப்பட்ட குளத்திற்கான தடயங்கள் கிடைத்தது மட்டுமன்றி[80] பிற பெருங்கற்காலக் கலாசார மையங்களும் குளங்களை அண்மித்தே காணப்படுவதும் இத்தகைய கருத்தினை உறுதி செய்கின்றது. பொம்பரிப்புப் பகுதியிலும் காணப்படும் குளங்களின் காலம் பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் இவை கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்தியவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[81] நெல் உற்பத்தியில் இக்கால மக்கள் ஈடுபட்டிருந்ததை பொம்பரிப்புத் தாழிகளில் இனங்காணப்பட்ட நெல்லுமியின் எச்சங்களும் அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்துள்ள இதற்கான ஆதாரங்களும் எடுத்துக் காட்டியுள்ளன.[82]

பல்வேறு பறவைகளையும் மிருகங்களையும் இக்கால மக்கள் பயன்படுத்தியதை எடுத்துக் காட்டுவனவாகப் பொம்பரிப்பு, அநுராதபுரம், கந்தரோடை போன்ற இடங்களிற் கிடைத்துள்ள இவற்றின் எலும்புகள் எடுத்துக் காட்டியுள்ளன.[83] மிருகங்களில், குறிப்பாக மாட்டின் எலும்புகள் அநுராதபுரம், ஆனைக்கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. அநுராதபுரத்தில் குதிரை, எருமை ஆகியனவற்றின் எலும்புகள் கிடைத்துள்ளன. இவற்றில் குறிப்பாக மாட்டெலும்புகள் கூரிய கருவிகளால்வெட்டப்பட்டுக் காணப்படுவதைக் கருத்திற் கொண்டு இவற்றை மக்கள் உணவுக்காகவும் பயன்படுத்தினார்கள் எனக் கருதப்பட்டாலுங்கூட மக்களின் விவசாய நடவடிக்கைகளில் இம் மிருகங்கள் முக்கிய பங்கினை வகித்ததும் குறிப்பிடத்தக்கது. இம் மக்களின் விவசாய முயற்சியை எடுத்துக் காட்டுவதாகப் பொம்பரிப்பிற் கிடைத்த கொழுவின் பகுதி விளக்குகின்றது. இத்தகைய கொழுக்கள் பின்வேவ, திவுல்வேவ போன்ற ஏனைய பெருங் கற்காலக் கலாசார மையங்களிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.[84] விவசாயத்துடன் வேட்டை ஆடுதல், கடல் படு திரவியங்களை உணவாகப் பயன்படுத்தல் ஆகியனவும் காணப்பட்டன. பொம்பரிப்பு அமைந்துள்ள பிரதேசம் முத்துக்கள் விளையும் கடற் பிரதேசமாகக் காணப்படுவதால் முத்துக்குளித்தலும் இக்கால மக்களின் தொழில்களில் ஒன்றாக விளங்கியது எனலாம்.

இக்கால மக்கள் நூல் நூற்று ஆடைகளைத் தயாரித்ததை உறுதிப் படுத்துவதாகப் பொம்பரிப்பிற் கிடைத்துள்ள வெண்கல மைக்குச்சியிலுள்ள ஆடையின் படிவங்கள் அமைந்துள்ளன.[85] ஆதிச்ச நல்லூரிற் கிடைத்த கருவிகளிலும் ஆடையின் படிவங்கள் காணப்படுகின்றன. பொம்பரிப்பு அமைந்துள்ள பகுதியில் விஜயன் குவேனியைச் சந்தித்தபோது அவள் நூல்நூற்றுக் கொண்டிருந்தாள் என மகா வம்சம் கூறும் ஐதீகமும் இப் பகுதியில் இத் தொழில் அக்காலத்தில் சிறந்து விளங்கியதை மேலும் உறுதி செய்கின்றது.[86] மக்கள் தம்மை அலங்கரிக்கப் பல்வேறு வகையான மணிகளினால் ஆக்கப்பட்ட மாலைகளைப் பயன்படுத்தினர் என்பதைப் பொம்பரிப்பு உட்பட ஈழத்திலும், தமிழகத்திலும் கிடைத்துள்ள பல்வேறு வகையான மணிகளின் எச்சங்கள் உறுதி செய்துள்ளன.[87]

பொம்பரிப்புத் தாழிக் காடு இரும்புக் காலப் பகுதிக்குரியதொன்றாயினும் ஆதிச்ச நல்லூரைப் போன்று இங்கும் வெண்கலக் கருவிகள் மிகுந்து காணப்படுகின்றன. இவற்றுள் வெண்கலத்தினாலான மைக்குச்சிகள், பல்வேறு வளைவுகளோடு அமைந்த காப்புகள், பல்வேறு வளைவுகளுடன் இறுதியில் திரட்சியான முனையையுடைய காப்புகள், ஊசிகள். வெண்கல மணிகளினாலமைந்த கழுத்து மாலைகள், மோதிரங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன.[88] வெண்கல மைக்குச்சிகள் தமிழகத்திலுள்ள ஆதிச்ச நல்லூர்,[89] திருக்காம்புலியூர்[90] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. ஊசிகள், வெண்கலத்தினாலான மணிகள், பல்வேறு வளைவுகளுடன் முனைகளிற் திரட்சியுள்ள காப்புகள் ஆகியனவும் ஆதிச்ச நல்லூரிற் கிடைத்துள்ளன.[91] ஈழத்தின் பிற பெருங்கற்கால மையப் பிரதேசங்களில் இரும்பினாலான கருவிகள் காணப்பட்டாலுங்கூட, பொம்பரிப்பில் இவற்றின் எண்ணிக்கை மிகக் குறைந்தே காணப்படுகின்றது. ஒரு சமயம் இதுவரை அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதியில் வெண்கலத்தினாலான கருவிகள் மிகுந்து காணப்பட்டமையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். இங்கு கிடைத்த இரும்பினாலான கருவிகளில் ஆணிகள், கொழுக்கள், முருகனது வேல் ஆகியன குறிப்பிடத்தக்கன.(படம்-5)

## ஈமத்தாழிகளின் காலம்

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் சங்க இலக்கியங்களில் மிகப்பழைய அடக்க முறையாகத் தாழி அடக்கம் காணப்படுவதும், தமிழகத்தில் மிகப் பெரிய தாழிக்காடான ஆதிச்சநல்லூரிற் கிடைத்த சான்றுகளை ஈழத்திற் கிடைத்த சான்றுகள் ஒத்துக் காணப்படுவதும் இவற்றின் பழைமையை உறுதி செய்கின்றன. ஆதிச்சநல்லூரின் காலம் கி.மு.1200 என இனங்காணப்பட்டாலுங்கூட, கொற்கையில் கிடைத்துள்ள சான்றுகளை $C_{14}$ காலக் கணிப்புக்கு உள்ளாக்கியதன் மூலம் இதன் காலம் கி.மு.9ஆம் நூற்றாண்டு(கி.மு.785/905) என்பது நிருபணமாகியுள்ளது.[92] மேற்கூறிய இடங்கள் தமிழகத்தின் தாம்ரவர்ணி நதிப்படுக்கையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாம்ரவர்ணி என்ற வடமொழி வடிவம் பாளியில் தம்ப பண்ணி என்ற வடிவமாக வழங்கப்பட்டது எனக் கூறும் அறிஞர் தண்பொருணை என்ற தமிழ் வடிவத்தின் திரிபுகளே இவை எனவும் எடுத்துக் காட்டியுள்ளனர்.[93] இதனால் தமிழகத்திலிருந்து தாம்ரபர்ணி ஆற்றோரத்திலிருந்து ஆதியில் ஈழத்திற் பரந்த பெருங்கற்கால மக்கள் ஈழத்திற்கும் அப்பெயரை இட்டதாற்போலும் ஈழத்திற்கு நாகரிகத்தினைப் புகுத்திய விஜயன் கூட்டத்தினர் இப் பெயரை இந்நாட்டுக்கு இட்டனர் என்கின்றன பாளிநூல்கள். அண்மைக் காலத்தில் அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பலனாகக் கிடைத்த சான்றுகள் இப் பகுதியில் பெருங்கற்காலக் கலாசாரம் கி.மு. 1000 ஆண்டளவில் உருவாகிவிட்டதென எடுத்துக் காட்டுவதால்[94] ஈழத்துத் தாழி அடக்கமுறையும் ஏறக்குறையச் சமகாலத்தில் இங்கு மேற்கொள்ளப் பட்டது எனலாம்.

தமிழகத்தில் பாண்டி நாட்டுக்கும் ஈழத்திற்குமிடையே காணப்பட்ட தொடர்பு பாளிநூல்களில் ஐதீகங்களாக விஜயன்-பாண்டிய இளவரசி திருமணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.. இவ்வாறே கி.மு.6 ஆம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வந்ததாகக் கூறப்படும் விஜயனின் பின் அரசாட்சி செய்த மன்னர்கள் பலர் பாண்டியரை நினைவுகூரும் 'பண்டு' என்ற பெயரைத் தாங்கி நின்றமையும் மேற்கூறிய தொடர்பை உறுதி செய்கின்றது.[95] பண்டுவாசுதேவ, பண்டுகாபய போன்ற பெயர்கள் இதற்கான உதாரணங்களாகும். இவ்வாறே பாண்டிய அரசரின் நாணயங்களும் வடபகுதியிற் கிடைத்துள்ளமை மேற்கூறிய தொடர்பை மேலும் உறுதி செய்கின்றது.[96] அத்துடன் ஈழத்துப் புலவரான ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல்கள் சங்க நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றுள் இடம் பெற்றுள்ளமையும்,[97] யாழ்ப்பாணப் பகுதியில் இன்றும் வழக்கிலிருக்கும் பல சங்ககாலச் சொற் பிரயோகங்கள்[98] தமிழக - ஈழத் தொடர்புகளுக்குச் சிறந்த உதாரணங்களாகின்றன. அத்துடன் ஈழத்துப் பிராமி வரிவடிவத்திலும் இருபடைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று பௌத்தம் ஈழத்திற்குக் கி.மு.3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புகுந்தபோது இங்கு அறிமுகமான வட இந்திய வரிவடிவம். மற்றது இதற்கு முன் தமிழகம் ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த பழைய திராவிட வரிவடிவம்.[99] ஆகும். இவ்வரிவடிவம் காலகதியில் பௌத்தத்துடன் வந்த வட இந்திய வரிவடிவத்தில் அமிழ்ந்தியது. எனினும், இப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் தமிழகத் தொடர்பினை எடுத்துக் காட்டும் தமிழகத்தோரைக் குறிக்கும் 'தமேட' என்ற பதம்,[100] பருமக[101] (பருமகன்/பெருமகள்) போன்ற விருதுப் பெயர்கள், ஆய்,[102] வேள்[103] பரத[104] போன்ற இனக்குழுக்களின் பெயர்கள் ஆகியன தமிழகத்தை ஒத்த சமூக அமைப்பே ஈழத்திலும் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. பாளி நூல்களில் தமிழகத்தோர் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் ஈழத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்புகள் பற்றிக் காணப்படும் குறிப்புகள் பண்டைய தமிழகம்-ஈழம் ஆகிய பிராந்தியங்களுக்கு இடையே காணப்பட்ட உறவை மேலும் உறுதி செய்கின்றன.

## முடிவுரை

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தமிழகம் போன்று ஈழத்திலும் பழைய ஈமச் சின்னங்களிலொன்றான தாழியடக்கமுறை காணப்பட்டதைத் தொல்லியற் சான்றுகள் நிருபித்துள்ளன. தமிழகத் தாழிகளுக்கும் பொம்பரிப்பு போன்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகளுக்குமிடையே தோற்றத்தில் மட்டுமன்றி இவற்றிலிடப்பட்ட பொருட்களுக்குமிடையேயும் ஒற்றுமையுண்டு. ஈழத்தில் சங்க இலக்கியத்தை ஒத்த இலக்கியப் பாரம்பரியம் காணப்படாவிட்டாலுங்கூட ஈழத்துப் புலவரின் செய்யுட்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதும், தமிழகத்துத் தமிழர் ஈழத்துடன் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டுவனவாகப் பாளி நூல்கள், கல்வெட்டாதாரங்கள் ஆகியவற்றில் செய்திகள் காணப்படுவதும் ஈழத்து நாகரிகம் தென்னிந்திய கலாசாரத்தின் ஓர் அங்கமாகவே ஈழத்திற்குப் பௌத்தம் புக முன்னர் விளங்கியமையைத் தெளிவாக்குகின்றது. தென்னிந்தியாவில் எவ்வாறு பெருங்கற்காலக் கலாசாரத்திலிருந்து தற்காலத் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய

பிரதேசங்களில் வழக்கிலிருக்கும் கலாசாரங்கள் உருவாகினவோ அவ்வாறே அதே பெருங்கற்காலக் கலாசாரத்திலிருந்து தற்காலத் தமிழ், சிங்கள மொழிகளைப் பேணுவோரின் கலாசாரமும் உருவாகியது எனலாம். தற்காலச் சிங்கள மொழியின் ஆதி வடிவமாகிய எலுமொழி கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்தத்துடன் வந்த பாளி மொழியினதும் வட இந்தியக் கலாசாரத்தினதும் செல்வாக்கால் தனித்துவ அம்சங்களுடன் வளர்ச்சி பெற, ஆரம்பத்தில் ஒரே அடித்தளத்திலிருந்து துளிர்த்த சிங்கள-தமிழ் கலாசாரங்கள் தனித்துவமான வேறுபட்ட கலாசாரங்களாக வளர்ந்தாலும் இன்றும் இவ்விரு கலாசாரங்களுக்கிடையே நிலவும் அடிப்படை ஒற்றுமைகள் இவற்றின் தொன்மையையும் தொடர்பினையும் எடுத்தியம்புகின்றன.[105]


## உசாவியவை


1 சிற்றம்பலம், சி.க. பண்டைய தமிழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி) 1991, பக்.27-41.
2. Kennedy.K.A.R. The Physical Anthropology of the Megalith Builders of South India and Sri Lanka(Canberra), 1975.
3 Allchin, F.R. Piklihal Excavations (Hyderabad), 1960, பக். 20-24
4. Wheeler, R.E.M, Brahmagiri and Chandravalli-Megalithic and other cultures in Mysore state, Ancient India, No.4, 1948, பக் 180-310
5. Seshadri , K.Report on Excavations at Narasipur(Mysore) 1971, பக்13-25
6. Nagaraja Rao, M.S. Proto-Historic cultures of the Tungabhadra River.(Dharwar), 1971, பக் 13-25
7. சிற்றம்பலம், சி.க., மே.கூ.நூல், 1991. பக் 78-114
8. Wheeler, R.E.M., மே.கூ.க., 1948.
9. Soundararajan, K.V. The Iron Age culture provinces of India ,Bharathiya Vidya, Vol.23, Nos.1-4, 1963, பக்.1-21
10.புறநானூறு, (பதிப்பு) துரைசாமிப்பிள்ளை, து.சைவசித்தாந்தக் கழக வெளியீடு, (திருநெல்வேலி), 1962-64.
11.நற்றிணை, நாராயணசாமிஐயர் உரை (சென்னை), 1956.
12.Rea,A.Catalogue of the Pre-historic Antiguities from Adichanallur and Perumbair (Madras), 1915.
13 Caldwell, R. Explorations at Korkei and Kayal, Indian Antiquary, Vol.6, 1877. பக்80-83
14 Damilica (Journal of the Archaeological Department of Tamil Nadu), No.I, 1970, பக்.50
15 Allchin, F.R. Pottery from graves in the Perumal Hills near Kodaikanal, Perspectives in Palaeoanthropology(ed) Chosh, A.K. (Calcutta),பக் 299-308
16.Sahney, V. The Iron Age of South India, Ph.D., Dissertation, University of Pennisylvania, (Philadalphia), 1965.
17.Banerjee, N.R, Ramachandran, K.S. and Bose , H.K. `Amirthamangalam 1955, A megalithic Urn Burial site in district Chingleput, Tamil Nadu, Ancient India, No.22, 1966, பக் 3-46.
18 Chanmugam, P.H. and Jeyawardena, F.L.W.Skeletal remains from Thirukkethiswaram, Ceylon Journal of Science, Section. G. Vol.V. Part 2. பக். 65-68
19.Ragupathy.P. Early Settlements in Jaffna-An Archaeological survey (Madras)1987, பக் 117-122.
20.மேற்படி பக்.127-132.
21 Deraniyagala, S. The Citadel of Anuradhapura 1969. Excavations in the Gedige Area. Ancient Ceylon, No.2, 1972, பக்48-169.
22 Sitrampalam, S.K. The Megalithic Culture of Sri Lanka, Ph.D., Dissertation University of Poona, (poona), 1980.
23.Allchin B. and Allchin F.R., The Birth of Indian Civilization, (Penguin Series), 1968, பக். 223.
24.Paranavithana, S. Sinhalayo, (Colombo), 1967, பக் 8-9

25 புஷ்பரட்ணம்.ப.பூநகரி-தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, (திருநெல்வேலி), 1993, பக். 22-23.
26.Hocart, A.K., Archaeological Summary, Ceylon Journal of Science, Vol.I, Part I, 1924-28, பக் 50-51
27.Paranavitana, S. Archaeological Investigations near Pomparippu, Ceylon Today, Vol.5, No.iii, 1956, பக் 13-15, Deraniyagala, P.E.P., Report of the Archaeological survey of Ceylon for 1956 Part IV, 1957, Report of the Archaeological Survey of Ceylon for 1957 part IV. (1958)
28.Codakumbura, C.E., Administrative Report of the Archaeological Commissioner for the Financial Year 1964-65, பக்94.
29.Begley, V. Excavations of Iron Age burials at Pomparippu-1970. Part I, Ancient Ceylon, Vol 4, பக். 52-96. Sitrampalam.S.K. மே.சுூ.நூல்.1980
30.Rea, A. மே.சுூ. நூல் 1915
31.Caldwell, மே.சுூ.நூல் 1877
32.Allchin, F.R. மே.சுூ.நூல் 1974
33.Thapar, B.K. Porkalam 1948. Excavations of a Megalithic Urn burial, Ancient India, No.8, 1952, பக்3-16
34.Banerjee, N.R., Ramachandran, K.S and Bose N.K. மே.சுூ.நூல் 1966
35.Rea, A. மே.சுூ.நூல் 1915, பக்.22-27; 30-38, படம் VI இல் 4, 15, 28-35.
36.Wheeler R.E.M. Arikamedu 1946. An Indo-Roman trading station on the east of India, Ancient India, No.2, 1946, பக்.56,
உரு. 16 வகை 9.
37.Banerjee, N.R. and Soundararajan, K.V. Sanur 1950-52. A Megalithic site in District Chingleput Ancient India, No.15, பக்.4-42
38.Benerjee, N.R. et.al மேற்படி.1996, உரு.3., இல 1,2,7,8.
39.Thapar, B.K. மே.சுூ.நூல் 1952, ப.10, இல.1-2
40.Mehta, K.N and George, K.M. Megaliths at Machad and Pazhayanur, Talppally Taluka, Trichur District, Kerala State, (Baroda) 1978 உரு.4, இல.1-3, 5-6.
41.Rea, A. மே.சுூ.நூல் 1915, பக்.30,31,34,35,இல 212-218; 264-271; 364-365; 455-462.
42.Banerjee, N.R., et.al, 1966 உரு 3, இல. 5-6
43.Rea, A. மே.சுூ.நூல் படம் VIII, இ.16.
44.Banerjee, N.R.et. al, 1959, உரு 15, வகை.7-81
45.Banerjee, N.R.et. al, 1959, உரு.2, இல. 1-3
46.Mahalingam, T.V. Report on the excavations in the lower Kaveri-Valley, (Madras), 1970.
47.Wheeler, R.E.M. மே.சுூ.நூல் 1946, உரு.15-16, வகை.8m
48.Banerjee, N.R et.al, 1959, உரு.2, வகை.1-2
49.Wheeler, R.E.M. மேற்படி 1946, உரு.14, இல.4; இல.2-3F, 5, உரு.15, இல.6-6F
50.Rea,A, மே.சுூ.நூல், படம் VIII, இல.11.
51.Wheeler, R.E.M. மே.சுூ.நூல், 1946, உரு.19
52.Mahalingam, T.V. மே.சுூ.நூல், 1970, உரு.6T1
53.Banerjee, N.R. The Megalithic Problem of Chingleput in the light of recent exploration, Ancient India, No.12, 1956, பக். 21-34. உரு.2.
54.Rea, A.மே.சுூ.க. 1915, படம் VI இல.17,22,29,30.
55.Rea, A. மே.சுூ.நூல் 1915, படம் VII, இல.19.
56.Wheeler, R.E.M. மே.சுூ.க. உரு 24-44
57.Banerjee, N.R.et. al, மே.சுூ.க. 1966, உரு.3. இல. 16,23,24.
58.Mahalingam, T.V. மே.சுூ.நூல் 1970, உரு 6a, வகை.16.
59.Rea, A. மே.சுூ.நூல், 1915, படம்.VII:பக்.24.
60.Wheeler, R.E.M.மே.சுூ.க. 1946, உரு.23, வகை. T.32-34
61.Mahalingam, T.V. மே.சுூ.நூல். உரு.60 வகை T 59, 60, 60A-60
62.Banarjee, et, al மே.சுூ.க 1966, உரு 3.இல.12


63.Rea, A. மே.கூ.க. 1915, படம் VIII, இல.30
64.மேற்படி, படம் VIII, இல.28.
65.Mahalingam, T.V. மே.கூ.நூல், 1970, உரு 18, வகை. T-45.
66.Rea, A. மே.கூ.நூல், 1915, VIII, இல. 4,7,10,13,16,21,23,26,27.
67.Thapar, B.K. மே.கூ.க. 1952, உரு.2.
68.Banerjee, N.R.et. al மே.கூ.க. 1959, உரு.3, இல. 14-17,20-23.
69.Mahavamsa,(ed) Geiger,W(Colombo) 1950, அதி. XXI. செய்.10-11.
70.Kennedy, K.A.R. மே.கூ.நூல், 1975.
71.Chanmugam. P.K. and Jeyawardena, F.L.N. மே.கூ.க. 1954.
72.Ragupathy,P. மே.கூ.நூல், 1987, பக். 119-122.
73.மேற்படி, பக்.127-130.
74.Kennedy.K.A.R. மே.கூ.நூல்., 1975.
75.மேற்படி, பக்.75-80; Luckas, John, R and Kennedy Kenneth A.R.Biological Anthropology of Human remains from Pomparippu, Ancient Ceylon, No.4, 1981, பக்.97-142.
76.Chanmugam, P.K. et. al. மே.கூ.க. 1954
77.Ragupathy.P. மே.கூ.நூல், பக்.200-203.
78.Sitrampalam, S.K. Ancient Jaffna-An ArchaeologicalPerspective, Journal of South Asian Studies, Vol.3, Nos 1 & 2, 1984, பக். 1-16.
79.Paranavitana, S. மே.கூ.நூல், 1967, பக் 8-9
80.Deraniyagala, S. மே.கூ.க 1972, ப. 159.
81.Nicholas, A short account of the history of irrigation works upto the 11th century'J.R.A.S.C.B.N.S. Vol. VII, 1960, பக்.43-64.
82.Sitrampalam, S.K. மே.கூ.க. 1980. பக்.208-209.
83.மேற்படி, பக். 209-210.
84.மேற்படி, பக். 210-211
85.மேற்படி. பக். 209.
86.Mahavamsa, மே.கூ.நூல், அதி.VII, செ.11.
87.Sitrampalam, S.K. மே.கூ.நூல்.1980, பக்.215-216.
88.மேற்படி பக். 211-212.
89.Rea, A. மே.கூ.நூல், 1915, பக்.13, இல.121.
90. Mahalingam, T.V. மே.கூ.நூல், பக். 52.
91.Rea, A. மே.கூ.நூல், 1915,பக்.13,இல.122.
92.Damilica, மே.கூ.நூல். No.1, 1970, பக்.50; Indian Archaeology-A Review, 1969-70 பக் 68.
93.Champakalakshmi, R. Archaeology and Tamil Literary Tradition', Puratattva, No.8. 1975-76, பக்.120. அடிக்குறிப்பு 6.
94.Deraniyagala, S.U. The Proto-and Early Historic Radiocarbon Chronology of Sri Lanka, Ancient Ceylon, No.12, 1990, பக். 251-292.
95.சிற்றம்பலம், சி.க. தமிழர் பற்றிக் கூறும் 'ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள்' தமிழோசை, தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி) 1988-89, பக். 29-36
96.சிற்றம்பலம், சி.க. யாழ்ப்பாணம்-தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு(திருநெல்வேலி), 1993, பக்.699, படம்-51.
97.சதாசிவம், ஆ,(தொகுப்பாசிரியர்) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், (கொழும்பு), 1966, பக்.3-7.
98.திருநாவுக்கரசு.க.த. இலங்கையிற் தமிழ்ப் பண்பாடு, (சென்னை), 1978.
99.Fernando P.E. The beginnings of Sinhala Script. ' Education in Ceylon-A centenary Volume (Colombo), 1969, பக். 19-24
100. Sitrampalam, S.K. Tamils in Early Sri Lanka- A Historical Perspective. Presidential Address to the Jaffna Science Association, Section D. ;(Social Science-Annual Session-1993; சிற்றம்பலம், சி.க. ஈழத்தமிழர் வரலாறு, கி.பி. 1000 வரை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி வெளியீடு (கைதடி)1994.

101.Sitrampalam, S.K. The Title Parumaka found in Sri Lankan Brahmi Inscriptions-A Reappraisal 'Sri Lanka Journal of South Asian Studies, No.1 (N.S). 1986/1987.
102. The Title Aya of Sri Lankan Brahmi Inceriptions-A Reappraisal: Summary of the paper submitted to the Archaeological Congress(Colombo) 1998.
103. The form Velu of Sri Lankan Brahmi inscriptions-A Reappraisal; Paper presented at the XVIII Annual Congress of Epigraphical Society of India, Tamil University (Thanjavur), in February 2-4, 1991.
104. Sitrampalam, S.K. மே.கூ.க. 1980, பக். 373-374.
105. Sitrampalam, S.K. Proto-historic, Sri Lanka-An Interdisciplinary Perspective' Journal of the Institute of Asian Studies
Vol. VIII, No 1, 1990, பக். 1-18.




பல்வேறு தோற்றங்களிலமைந்த தாழிகள் (பொம்பரிப்பு)

படம் 1




தாழிகள் மூடப்பட்ட சட்டிகள், (பொம்பரிப்பு)




அலங்கார வேலைப்பாடுள்ள தாழி
(பொம்பரிப்பு)

படம் 2




கிண்ணங்களும் வட்டில்களும் (பொம்பரிப்பு)

படம். 3.




குதிரையின் கடிவாளக் குறியீடுகளுடனான பானைகள். (பொம்பரிப்பு)



மூடியும் தாங்கிகளும்.(பொம்பரிப்பு)

படம் 4



வேல்

கொழுவின் பாகம்

மைக்குச்சிகள்

பல்வேறு வளைவுகளுடனான காப்புகள் (பொம்பரிப்பு)

படம் 5